செ.வெ.எண்: 66 / ஜீன் / 2021 நாள்: 17.06.2021

## செய்திக் குறிப்பு

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளின் பெற்றோர்கள் யாரேனும் கொரோனோ தொற்றினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தால் அக்குழந்தைகளின் பாதுகாப்பு, பராமரிப்பு தேவைகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தை அல்லது மாவட்ட சமூகநல அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். அக்குழந்தைகளுக்கு தேவையான பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைகள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட அளவிலான குழு உறுப்பினர்கள் மூலம் மேற்கொள்ளப்படும். எனவே, பொதுமக்கள் இது தொடர்பாக இலவச தொலைபேசி எண் 1077, மாவட்ட சமூகநல அலுவலகம் தொலை பேசி எண் - 0431-2413796, இளநிலை உதவியாளர், மாவட்ட சமூக நல அலுவலகம் கைப்பேசி எண்: 9942055389 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம் என்று திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**